**இந்திய உயர் ஸ்தானிகராலயம்**

**கொழும்பு**

**ஊடக அறிக்கை**

இந்திய உயர் ஸ்தானிகராலயம் 2019-20 கல்வியாண்டுக்காக சுயமாக நிதித் தேவையைப் பூர்த்தி செய்யும் திட்டத்தின் கீழ் மருத்துவம், பல் மருத்துவம், பொறியியல், தொழில் நுட்பவியல், மருந்தியல் மற்றும் கட்டிட நிர்மாணவியல் துறைகள் சார்ந்த பட்டப்படிப்புக் கற்கை நெறிகளுக்கு தகுதியான இலங்கை மாணவர்களிடமிருந்து (இந்திய வம்சாவழி, வெளிநாட்டு பிரஜாவுரிமை பெற்ற இந்திய அட்டை வைத்திருப்போர்கள் மற்றும் இந்தியாவில் வதியாத இந்தியர்கள் விலக்கலாக) விண்ணப்பங்களை வரவேற்கிறது.

2. மருத்துவம்/பல் மருத்துவ நெறிகளுக்காக விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரிகள் மே 2019 இல், இரண்டாம் நிலைக் கல்வி மத்திய சபை, புது டெல்கி இனால் நடத்தப்பட்ட 'நீட்' (NEET) பரீட்சையில் 50 சதவீத புள்ளிகளைப் பெற்றிருத்தல் வேண்டும். கட்டிட நிர்மாணவியல் பட்டப் படிப்பைப் பின்பற்ற விரும்புவோர், புது டெல்கி, கட்டிட நிர்மாணவியல் சபையினால் குறித்துரைக்கப்பட்ட தகுதிகாண் பரீட்சையில் சித்தியெய்துவதற்கு தேவைப்படுத்தப் படுகின்றனர்.

3. ஆர்வமுள்ள விண்ணப்பதாரிகள், ஏதேனும் வேலை நாட்களில் 2.00 பி.ப – 4.00 பி.ப (1400-1600 hrs) இடைப்பட்ட நேரங்களில், கொழும்பு 3 இல் அமைந்துள்ள, இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின் கல்விப் பிரிவில் கிடைக்கும் விண்ணப்பப் படிவங்களை நிரப்பி இலங்கையின் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரம் மற்றும் உயர் தரச் சான்றிதழ்கள் (கல்வித் திணைக்களம், பத்தரமுல்லவினால் வழங்கப்பட்டது) அல்லது லண்டன் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரம் மற்றும் உயர் தரச் சான்றிதழ்கள் மற்றும் பிறப்புச் சான்றிதழ் என்பவற்றுடன் சமர்ப்பிப்பதற்கு கேட்கப்படுகின்றனர்.

4. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் உயர் ஸ்தானிகராலயத்தில் பெற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி ஜூன் 10, 2019 ஆகும்.

கொழும்பு
மே 07, 2019